*A STUDY OF CHOLA-ERA DOCUMENT REGISTRATION SYSTEMS*

# சோழர் காலத்திய ஆவணப் பதிவு முறைகள் ஓர் ஆய்வு

க. அம்பேத்கார்* கா. பரந்தாமன்
உதவி ஆய்வாளர்* உதவிப் பேராசிரியர்**
வரலாற்றுத்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-630 003
Email: haripraththaap2013@gmail.com

## முன்னுரை

இடைக்காலத் தமிழ்நாட்டில் பல வகை ஆவணங்கள் வழக்கில் இருந்தன தனியார் இருவரிடையே ஏற்படும் பரிவர்த்தனைகள், விற்பனைகள், உடன்பாடுகள், சபை, ஊர் ஆகியவை எடுத்த முடிவுகள், தீர்மானங்கள், அளித்து சலுகைகள்; அரசு அளிக்கும் சலுகைகள், தொடர்ந்து நடைபெற வேண்டிய தர்மங்கள், நியதிகள் ஆகியவை ஆவணங்களாக பதிவு செய்யப்பட்டன.ஓலையிலோ, கல்லிலோ அல்லது செம்பிலோ இவை பதிவாயின. தர்மசாஸ்திரம் போன்ற நீதி நூல்கள் ஆவணங்கள் எப்படி அமையவேண்டும் என்பதற்கு வரன்முறைகள் வகுத்துள்ளனர். வியாசர், பிரஜாபதி போன்றோர் ஆவணங்களை (பத்திரங்களை) உபகதபத்திரம் (ரசீது, ஒப்புச்சீட்டு) கிரையபத்திரம் (விலை),ஆத்ஹிபத்திரம் (அடைமானம்) ,சந்திபத்திரம் (உடன்படிக்கை), ஸ்திதிபத்ரம் (நிலையான நடைமுறை), விபாக பத்ரம் (பாகப்பிரிவினை), தாநபத்ரம் (அடிமை) என்று வகைப்படுத்தியுள்ளனர். சோழர் காலத்தில் ஆவணங்களின் வகைகளும் அவை எழுதப்பட்ட முறைகளும் நிறையக் காணப்படுகின்றன. தன்மையில் கல்வெட்டுகள், தாமே ஆவணங்கள் என்றாலும், அவை மேலும் பல வகையான ஆவண வகை, முறைகளைக் காற்றில்
காட்டி நிற்கின்றன.

*Abstract*

*Various types of documents were in use in medieval Tamil Nadu. Transactions, sales, and agreements between private individuals; decisions, resolutions, and concessions made by assemblies (*Sabha*) and village bodies (*Ur*); as well as state-granted privileges, perpetual charitable endowments, and established regulations were all recorded as documents. These records were inscribed on palm leaves, stone, or copper plates. Legal treatises like the *Dharmashastras* laid down guidelines for the drafting of such documents. Jurists such as Vyasa and Prajapati classified these documents into categories such as *Upagata-patra* (receipts/acknowledgments), *Kraya-patra* (sale deeds), *Adhi-patra* (mortgage deeds), *Sandhi-patra* (agreements), *Sthiti-patra* (records of established practice), *Vibhaga-patra* (partition deeds), and *Dana-patra* (deeds of gift/transfer). The Chola period offers numerous examples of document types and the methods used to draft them. While stone inscriptions are documents in their own right, they also provide evidence of a wide range of other document categories and recording practices.*

*Keywords*

*Chola, History, Document, Record, Methods*

**வகைகள்**

**ஆவணம்**

விலை ஆவணம் நிலவிலை ஆவணம், பங்குவிலை ஆவணம் என்ற வகை வகையான ஆவணங்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஆவணங்களைப் பரிமாற்றிக் கொள்ள ஆவணக் களங்கள் இருந்தனபோல் தெரிகிறது. இன்று பதிவாளர் முன்னிலையில் விலைக்குண்டான தொகையைக் கொடுத்து வாங்குவது போலவே அன்றும் ஆவணக்களத்தில் தொகை கொடுத்து வாங்கப்பட்டது எனக் குறிப்புகள் உள்ளன. எனினும்

இது தொடர்பான ஆவணக்களம், ஆவணக்களி, ஆவணக்களரி போன்ற சொற்களுக்கான பொருள்கள் மேலும் ஆராயப்பட வேண்டியவை ஆகும்.

பிரமாணம்

விலைப் பிரமாணம், நிலவிலைப் பிரமாணம், பூமி பிரமாணம், இறைகாவல் பிரமாணம், சண்டேஸ்வர பிரமாணம் என்று பிரமாணம் என்ற சொல்லாட்சி சோழர்கள் காலக் கல்வெட்டுகளில் பழகி வருகிறது. ஆள்விலைப் பிரமாணம் கீழே தனியாக விவரிக்கப்பட்டுள்ளது. ஆசிரயப் பிரமாணம் என்பது அஞ்சியவர்களுக்கு அடைக்கலம் அளிப்பது தொடர்பானது. இறைகாவல் பிரமாணம் என்பது வரி கட்டுவதற்கு விலக்கு அளிப்பது தொடர்பானது.

தீட்டு

தீட்டு என்பது எழுதப்பட்டது என்று பொருள்படும். கைத்தீட்டு, ஒட்டிசைவுத் தீட்டு, நிலைமைத் தீட்டு, அடையோலைத் தீட்டு,உபயத்தீட்டு, இசைவுத்தீட்டு அன்னிய நாமகரணத் தீட்டு, ஆள்விலைப் பிரமாணத் தீட்டு என்று சோழர்காலக் கல்வெட்டுக்கள் பல வகை தீட்டுக்களைக் காட்டுகின்றன.இசைவுத் தீட்டு என்பது இருவர் நடைமுறைகள், விலை முறைகள் இவற்றை ஏற்று எழுதிக் கொள்வது.

ஓலை

அறையோலை,இறையோலை, இறைகாவல் ஒட்டோலை, பொருள் மாவறுதிப் பொருட்செலவோலை, சிலவோலை, அடையோலை, என்று பல வகைகள் உள்ளன. மன்னன் கொடையாக நிலங்களைக் கொடுத்தது பற்றிய ஆணை நாட்டாரிடம் வரும்போது நாட்டார் ஆணையைத் தலைமீது ஏற்று நிலங்களின் எல்லை காட்டி அறவோலை செய்து கொடுத்தனர் என்று செப்பேடுகள் பலவற்றிலும் காணப்படுகிறது. இறையோலை என்பது

வரிவிலக்கு தொடர்பானது. இறைகாவல் ஒட்டோலை என்பது ஒரு கொடை நிலத்தின் வருங்கால வரிகளுக்காக முன்னதாகவே காசு அல்லது பொன் போன்றவை கொடுத்து எழுதும் ஆவணமாகும். விலைக்காகப் பேசும் போது ஏற்படும் பல செலவினங்களையும் ஏற்று குறிப்பிட்டு உறுதி செய்து எழுதும் ஓலை பொருள் மாவறுதிப் பொருட்செலவோலை ஆகும்.

## பிற வகைகள்

மேற்கண்ட வகைகளைத்தவிர மேலும் அறுதிப்பரிவர்த்தனை, நிலவழிப்பரிவர்த்தனை, விலைசிராவனை, இறையிலி சிராவனை, கைத்தடி, கையெழுத்து,கையடி, பரிசு, ஒழுகு, தெறிப்பு, விய்வஸ்தை, முறி, நியோகம் போன்ற வேறுபட்டவகைகளும் சோழர்காலக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. பல இடங்களில்ஆவணங்களை நேரடியாகக் கல்வெட்டுகளாகவே பொறித்தும் அக்கல்வெட்டுகளையே ஆவணங்களாக மேற்கோள் காட்டப்பட்டும் காட்டப்பட்டுள்ளன.

## ஆன் ஓலை

மனிதனை விலை பேசி விற்று அதற்காக எழுதி பதிவு செய்யும் ஆவணம் ஆன் ஓலை அல்லது ஆள் விலைப் பிரமாணம் என்று வழங்கப்பட்டது. வேதாரணியத்தில் மூன்றாம் ராஜராஜன் காலத்தில் ஆள் விலைப் பிரமாணம் தீட்டு என்று எழுதப்பட்டுள்ளது. இறைவனுக்கு அரியான் பிச்சன் என்பவனால் 10 பேர் 1000 காசுக்கு விற்கப்பட்டுள்ளனர். 10 பேர் 5 பேர் இவனது முன்னோரால் ஏற்கனவே விற்கப்பட்டவர்கள் ஆவர். கல்வெட்டு இவர்களே அடியார்கள் என்றும் சதையாண்டி கூட்டத்தவர் என்று விற்பனை இவர்களது வழிவழியினரையும் உள்ளடக்கியது என்றும் குறிக்கின்றது. அடிமை வாழ்வு கூட்டம் கூட்டமாகவும், வழிவழியாகவும் விலைப் பொருளாகவும் இருந்ததைக் கல்வெட்டு நன்கு உணர்த்துகிறது.

ஆள்விற்பனை ஆவணமாகப் பதிவு செய்யப்பட்டுக் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டதைக் காணும் போது ஒரு அடிமை வாழ்வு அன்றைய தமிழ்ச் சமுதாயம் ஏற்றுக் கொண்ட மரபு என்று கூற வேண்டியுள்ளது.

தோற்ற மன்னர்கள் வென்ற மன்னர்களின் அடிமைகள். அதுகூட ஆள் ஓலையாக எழுதப்பட்டதை ஒரு பாடல் கல்வெட்டு எடுத்துப் காட்டுகின்றது. மூன்றாம் குலோத்துங்கனின் கீழ் இருந்த வாண மன்னனின் இக்கல்வெட்டு தென்னாற்காடு மாவட்டம் திருப்பாவைப் பந்தலில் உள்ளது.

"தாரு முடியு முரசுந் தமக்குரிய
பாரு முடன்பெறுவர் பார்வேந்தர் – வீரப்
பெருமாள் மகதேசன் பேரெழுதித் த்த்தந் திருமார்பில் ஆளோலை செய்து"

பெரியபுராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணம் நம்பியாரூரை இறைவனுக்கு அடிமை என்று பேசும் இறைவன்

"அக்காலம் உன் தந்தை தன் தந்தை ஆள் ஓலை ஈதாஸ்
இக்காரியத்தை நீ என்று சிரித்ததென் ஏட"

என்று அடிமையை ஏட என்று அடக்குகின்றார். மேலும்

"இசைவினால் எழுதும் ஓலை காட்டினான் ஆகில் இன்று
விசையினால் வலிய வாங்கிக் கிழிப்பது வெற்றி ஆமோ"

என்று இறைவன் கூறும் சொற்களால் ஆள் ஓலைஇசைவோடு எழுதப்பட்டது என்பது மிகத் தெளிவாக தெரிகிறது. அவ்வோலையில்

எழுதப்பட்ட வாசகத்தைச் சேக்கிழார் நல்ல முழு ஆவணமாகவே பாடலில் தருகின்றார்.

கல்வெட்டுக்களில் மட்டுமில்லாது சோழர் கால இலக்கியத்திலும் ஆவண முறை தெளிவாக காட்டப்படுவது சோழர் காலத்தில் ஆவன அமைப்புகள் வழக்கில் மலைந்திருந்தமைக்கு எடுத்துக்காட்டாகும்.

நிலைமைத்தீட்டு

எதிர்காலத்தில் இப்படி நடக்க வேண்டுமென குறுநில மன்னர் அல்லது தலைவர் தமக்குள் எழுதிக் கொடுக்கும் உடன்படிக்கை நிலைமைத் தீட்டாகும். சோழர்களுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்கள் இப்படி எழுதிக்கொண்ட நிலைமைத் தீட்டு செங்கத்தில் (வடார்க்காடு மாவட்டம்) கல்வெட்டாக உள்ளது. விக்ரமசோழன் சம்புவராயர், கரிகாலச்சோழ ஆடையூர் நாடாழ்வார் ஆகிய இருவருக்கு விடுகாதழகிய பெருமாளான இராஜராஜ அதிகமான் எழுதித்தந்த நிலைமைத் தீட்டின் சில பகுதிகள்:

“இவர்கள் எநக்கு ஒரு காலமும் தப்பாதிருப்ப,
நானும் இவர்களுக்கு ஒரு காலமும் தப்பாதிருக்க கடவேனாகவும்
இவர்களுக்கு இன்னார் எனக்கின்னாராகவும், எனக்கின்னாதார்
இவர்களுக்குக்கின்னாதார்களாகவும், இவர்கள் பகை
என்பகையாகவும், என்பகை இவர்கள் பகையாகவும்;

“யாதவராயர் பக்கலும் செய்யகங்கர் பக்கலும்
குலோத்துங்கசோழ சம்புவராயர் பிள்ளைகள் பக்கலும்
ஆளும் ஒலையும் போகக் காட்டுதல் உறவு பண்ணுதல்
செய்யாதேனாகவும்; நாடும்முன்புஇராஜராஜதேவர்போது
நின்றபடியேஎங்களில்எல்லைகொல்லைகள் நிற்பதாகவும்

இருபத்தொன்றாவது ஆவணி மாதத்து செய்த நிலைமை
த்தீட்டின்படியே மற்றுள்ள காரியங்களும் ஒருகாலமும்
தப்பாதேயிருக்கக் கடவேனாகவும் இப்படி சம்மதித்தேந்
விடுகாதழகிய பெருமாளே ன்"

### அந்நிய நாமகரணத் தீட்டு

கோயிலுக்கு வழிபாட்டிற்காக நிலங்கள் கொடுக்கும் போது இறைவன் பெயரிலேயே அதாவது திருநாமத்தையே ஆவணங்கள் எழுதுவது மரபு. இப்படி எழுதிக் கொடுக்கப்படும் நிலங்கள் திருநாமத்துக்காணி என்றழைக்கப்பட்டன. கொடையாளர் செய்ய நினைத்த தர்மத்திற்கு (விளக்கு, அமுது படி முதலியன) உண்டான செலவுகளுக்கும் அதிகமாக அந்நிலத்தால் வரும் அதிகப்படி வருவாய் கோயிலுக்கே சேர்ந்துவிடும். இந்த அதிகப்படி வருவாயைப் பிறர் ஒருவருக்கு வழி திருப்பிக் கொடுக்க பிறிதொருவர் பெயரில் அதாவது அந்நியநாமத்தில் எழுதும் ஆவணமே அந்நிய நாமகரண தீட்டாகும்.

### ஆவண வழக்காறுகள்

#### எழுத்து

ஆவணம் எழுதிக் கொடுப்பவர்கள் இறுதியில் கையப்பம் இடுவது என்ற மரபு சோழர் காலத்தில் மிக அவசியமானதாக இருந்தது. "இவை என் எழுத்து" என்ற பெயர்களுடன் ஆவணத்திற்கு கையொப்பங்கள் உயிர் கொடுத்து விளங்கின.

#### அறிவேன்

ஆவணங்களில் சாட்சி கையெழுத்து இடுவது என்பது சோழர் காலத்தில் பரந்து காணப்படுகிறது. சாட்சி கையொப்பமிட அவர்கள் 'இப்படி அறிவேன்' என்று தங்கள் பெயருடன் ஒப்பமிட்டு 'இது என்

எழுத்து' என்று முடித்தனர். ஓர் ஆவணத்தில் பல சாட்சியங்கள் சோழர் கால கல்வெட்டுகளில் பொதுவாக காணப்படுவதாகும்.

## ஸயிஞ்ஞை, தற்குறி

கையப்பமிடத் தெரியாதவர்கள் ஆவணங்களில் எழுத்தாணியால் சிறிது கீறுவர். இந்தக் கீறல் அல்லது குறி தற்குறி அல்லது ஸயிஞ்ஞை எனப்பட்டது. 'இவை என் எழுத்து' என்பதற்கு பதிலாக 'இது (பாரதாயன் கேசவன் அறிவரியான்) ஸயிஞ்ஞை (அல்லது தற்குறி) என்று குறிப்பிட்டனர்.

## மாட்டறிதல்

ஸயிஞ்ஞை என்றும் தற்குறி என்றும் குறிப்பிட்டவரது குறி கையொப்பமிடத் தெரிந்த ஒருவரால் மாட்டறிந்து (சரி என்று கொல்லப்பட்டு) கையொப்பமிடும் பழக்கம் சோழர் காலத்தில் இருந்தது. இவர்கள் 'தற்குறி மாட்டறிந்தேன்' ஸயிஞ்ஞை என்று குறிப்பிட்டு இது என் எழுத்து என்று தங்கள் கையொப்பமிட்டனர். இன்று கைரேகை வைக்கும்போது 'இன்னாருடைய இடது கை பெருவிரல் கீறல் என்று மற்றொருவர் கையொப்பம் இடும் பழக்கம் இது போன்றதே.

## முதுகண்

ஒருவருக்கு மற்றொருவர் பிரதிநிதியாக இருந்து ஆவணங்களை எழுதும் மரபு அன்று இருந்தன. அவ்வழக்குகளில் 'முதுகண்ணாக உடைய',என்று பெயர் எழுதி கையொப்பம் இட்டனர். குழந்தைகளுக்கு தாயும், தாய்க்கு குழந்தைகளும் முதுகண்ணாக இருந்தமைக் கல்வெட்டுகளால் தெரியவருகிறது. 'முதுகண்ணாக்க் கொண்டு விலைப் பிராமணம் பண்ணி கொடுத்த பரிசாவது 'முக்கண்ணாக உடைய செல்லப்பெண் ஞானியேன்' .

**புணை**

ஒருவர் ஒரு தர்மச் செயலை செய்ய ஒப்புக்கொண்டார் எனினும் அவருக்கு மற்றொருவர் புணை அல்லது பிணை கொடுக்கும் மரபு சோழர் காலத்தில் இருந்தது. இன்றைய பாதுகாப்பு (செக்யூரிட்டி) கொடுக்கும் முறையை ஒத்தது. 'சேந்தனை புனையாகக் கொடுத்து' போன்ற கல்வெட்டு வரிகளை இங்கு குறிப்பிடலாம்.

**திரி விட்டுக் கொடுத்தல்**

ஒருவர் பெயரில் உள்ள ஆவணத்தை அல்லது அவ்வாணத்தில் குறிப்பிட்டுள்ள செயற்பாடுகளை மற்றொருவர் பெயருக்கு மாற்றி கொடுத்து விட்டுக் கொடுத்தல் திரி விட்டுக் கொடுத்தல் என்று வழங்கியது.

**ஒட்டிக்கொடுத்தல்**

ஒரு செயலை ஒப்புக் கொள்வதும் ஏற்று நடத்துவதாக சம்மதம் கொடுப்பதும், ஏற்றுக் கொள்வதுமாக ஒருவர் ஆவணத்தில் கையொப்பமிடுவது 'ஒட்டிக்கொடுத்தல்' என்று வழங்கியது.

**அடுத்துக்குடுத்தல்**

கொடையாகக் கோயிலுக்கு கொடுக்கப்பட்ட ஆடு, நிலம் போன்றவை பராமரிப்புக்காக மற்றொருவருக்கு கோயிலைச் சேர்ந்தவர்கள் கொடுப்பது 'அடுத்துக் கொடுத்தல்' என்று வழங்கியது.

**ஆவணம் எழுதியவர்கள்**

ஆவணங்களில் எழுதியவர்கள் ஊர் கணக்கர் மத்தியஸ்தர் போன்றவர்கள் ஆவணங்களை எழுதியவர்கள் தங்கள் கையொப்பத்தை ஆவணங்களில் இட்டார்கள். ‘எழுதினேன் வேட்கோவன்’

## முடிவுரை

சோழர் காலத்தில் நல்ல நீர்ப்பாசன வசதிகள் ஏற்பட்டு நிறைய நிலங்கள் பயிரேற்றப்பட்டன. சமுதாயத்தின் முதுகெலும்பாக விவசாயம் மாறியது. சோழர் சமுதாயத்தில், வாழ்வின் மையப் பொருளாக செல்வமாக நிலங்கள் விளங்கின. எனவே நிறைய நிலப் பரிமாற்றங்கள் ஏற்பட்டு எண்ணற்ற ஆவணங்கள் சோழர் காலத்தில் நிலவின. சோழர் காலத்தில் கற்கோயில்கள் நிறைய எடுக்கப்பட்டமையால் கல்வெட்டுகள் நிறைய வெட்டப்பட்டன. எனவே மேற்சொன்னவை மட்டுமல்லாது இன்னும் பல்வேறு வகையான தோன்றி ஆவண முறைகளுகம், வகைகளும் மலிந்தன.

*Acknowledgement*

*This research article is Supported by RUSA 2.0 MHRD, INDIA in ALAGAPPA UNIVERSITY (A State University Accredited with A+ Grade by NAAC (CGPA: 3.64) in the Third Cycle and Graded as Category-I University by MHRD-UGC, 2019: QS ASIA Rank-216, QS BRICS Rank – 104, QS India Rank-20), Karaikudi-630003.*

## நூற்பட்டியல்

1. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள், பதிப்பு, இரா. நாகசாமி 1969
2. தர்மபுரி கல்வெட்டுகள் பதிப்பு இரா. நாகசாமி 1975
3. திருத்துறைப்பூண்டிக் கல்வெட்டுகள், பதிப்பு, இரா. நாகசாமி 1978
4. செங்கம் நடுகற்கள், பதிப்பு, இரா. நாகசாமி 1972

5. குடந்தைக் கல்வெட்டுகள் முதல் தொகுதி, பதிப்பு எண் மார்க்சீய காந்தி 1980
6. கரந்தைச்செப்பேட்டுத் தொகுதி,பதிப்பு சிகோவிந்தராஜன் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் மதுரை, 1984
7. தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள் பதிப்பு, இராசு.செ. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 1987
8. ஆவணம் தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர் தொகுதி 1-11 1991 முதல்
9. பாண்டியர் செப்பேடுகள் பத்து பதிப்பு தமிழ் வரலாற்றுக் கழகம் சென்னை 1967